**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>**

**முன்னிலை. செல்வி. மு.அபிநயா., B.A. B.L..,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2023–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை,

**இ.ம.எண்.1208/2015 in அ.வ.எண்.496/2015**

---------

ரவி ...மனுதாரர்/வாதி

/எதிர்/

நாகம்மாள்

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 10.07.2023–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முத்துகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாண்டியராஜன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை, இந்நீதிமன்ற ஆய்விலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுச்சொத்தில் மனுதாரர்/வாதி அமைதியான முறையில் சுவாதீனமிருந்து, அனுபவம் செய்துவருவதை எதிர்மனுதாரர்களோ/பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்நாளும், எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என ஒரு தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட் எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று விளம்புகை செய்யக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மனுதாரரின் தந்தை வழி தாத்தா ராமசாமிக்கு மனுதாரர் தாத்தா கந்தசாமி மற்றும் பிரதிவாதியின் கணவர் மூவாரியான் என இரண்டு மகன்கள் என்றும் மனுதாரர் தாத்தா கந்தசாமிக்கு, மனுதாரரின் தந்தை கலியபெருமாள் மற்றும் ராமசாமி வாரிசுகள் என்றும் மூவாரியான் அவர்களுக்கு வாரிசுகள் இல்லை என்றும் தாவா சொத்தானது மேற்படியாளர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் மனுதாரர் தந்தைக்கு பாத்தியப்பட்டு அவரது சுவாதீனத்திலும் அனுபவத்திலுமே இருந்து வந்தது என்றும் மனுதாரர் தந்தை இறந்தபிறகு வழக்கிடை சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டு மனுதாரது சுவாதீனத்திலும் அனுபவத்திலுமே நாளது தேதிவரை இருந்துவருகிறது என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

4. தாவா சொத்தில் உள்ள கூரை வீட்டிற்கு மனுதாரரே இதுவரை வீட்டு வரி மற்றும் மின்கட்டணம் போன்றவற்றை மனுதாரர் பெயரிலேயே செலுத்தி வருகிறார் என்றும், வழக்கிடை சொத்து மனுதாரருக்கு

ஏகதேசமாக பாத்தியப்பட்டு மனுதாரது சுவாதீனத்திலும், அனுபவத்திலுமே இருந்து வருகிறது என்றும் எதிர்மனுதாரர் மனுதாரரின் சின்ன அப்பாயி என்றும், மேற்படியாளர்களுக்கு வாரிசு யாரும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் கணவர் மூவாரியான் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும் எதிர்மனுதாரருக்கு குழந்தைகள் யாரும் இல்லை என்பதை தவறாக பயன்படுத்திக்கொண்டு அவருக்கு அவரது உறவினர்களும், நண்பர்களும் செய்த துர்போதனையின் விளைவாக எதிர்மனுதாரர், மனுதாரருக்கு பாகம் பிரிந்த தாவா சொத்தை சட்டத்திற்கு புறமாக ஆக்கிரமிக்க வேண்டி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினையும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாக கூறி விற்பனை செய்வதற்கு முயற்சி செய்து வருகிறார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

5. மேலும் மனுதாரர் அமைதியான முறையில் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்துவரும் தாவா சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று கூறி, மனுதாரரை தாவா சொத்தை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தி கடந்த 30.11.2015ம் தேதியன்று இடையூறு செய்தார் என்றும் எனவே எதிர்மனுதாரர் எந்த நேரத்திலும் தாவா சொத்தை ஆக்கிரமித்து மனுதாரர் சுவாதீனத்தையும், அனுபவத்தையும் இடையூறு செய்ய எத்தனிக்க கூடும் என்றும், எனவே இம்மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமும், நியாயமும் ஆகிறது என்றும், இல்லையேல் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத துன்பமும், இழப்பும் ஏற்படும் என்றும் மனுதாரரால் எடுத்துரைக்கப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரே தனது வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனுச்சொத்து விபரம் தவறு என்றும் மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள விவரங்களை இந்த எதிர்மனுதாரரால் குறிப்பாக மறுத்துரைக்கப்படுகிறது என்றும் ராமசாமி இறப்பிற்கு பின்னிட்டு வாதியின் தகப்பனாருக்கும் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றும் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை படி தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரரின் கணவருக்கு பாத்தியப்பட்டு அவர் இறக்கும் காலம்வரை அவரது சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தது என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

7. எதிர்மனுதாரரின் கணவர் மூவரியான் இறப்பிற்கு பிறகு தாவா சொத்துக்கள் இவ்வெதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டு எதிர்மனுதாரரின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும் இவ்வெதிர்மனுதாரர் கடந்த 04.12.2015 ம் தேதியன்று தாவா சொத்தை செல்வராஜ் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து தாவா சொத்தின் சுவாதீனத்தை அவர் வசம் ஒப்படைத்துவிட்டார் என்றும் மேற்படி விவரம் தெரிந்தபிறகு மனுதாரர் இவ்வழக்கு மற்றும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரை மூலமாக எடுத்துரைக்கப்பட்டது.

8. மனு, எதிர்மனுவுரை வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்காவணங்களை ஆராய்ந்ததில் அசல் வழக்கானது

விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மனு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தனக்கு முதல் தோற்ற வழக்கு மற்றும் சமச்சீர் நிலை உள்ளது என்பதை தகுந்த ஆவணங்களின் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு எதுவும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் இருதரப்பு சாட்சிகளையும் விசாரணை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு தீர்மானிக்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு 2023–ம் ஆண்டு ஜுலை மாதம் 20–ம் நாள் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும்  சான்றாவணங்கள்</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை

ஒப்பம்/—மு.அபிநயா,
கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.